மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22–ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 22/21

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: கருப்பசாமி | தேதி : 22.09.25 |
| வயது : | த/பெ : சங்கரலிங்கம் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>22.09.25 முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி மற்றும் வாதிகள் தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து உள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும்.

2. 03.05.1994 ம் தேதி தாவா சொத்துக்களை பொறுத்து இளம்குன்னப்புழா ஜோசப் சன்னி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 1 ஆகும். 30.08.2013 ம் தேதி 1ம் தபசில் சொத்துக்களை பொறுத்து என் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 2 ஆகும். 30.08.2013 ம் தேதி 2ம் தபசில் சொத்தினை பொறுத்து என் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 3 ஆகும்.

3. 17.12.2020 ம் தேதிய 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்திற்குரிய கணிணி பட்டாவின் இணைய வழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 4 ஆகும்.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.09.22 19:04:57 +0530

17.12.2020 ம் தேதிய 1 ம் தபசில் 2 ம் அயிட்ட சொத்திற்குரிய கணிணி பட்டாவின் இணைய வழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 5 ஆகும். 17.12.2020 ம் தேதிய 2 ம் தபசில் சொத்திற்குரிய கணிணி பட்டாவின் இணைய வழி நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 6 ஆகும். 16.12.2020 ம் தேதி தாவா சொத்துக்களுக்கு நான் நில தீர்வை செலுத்தியதற்கான ரசீதின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 7 ஆகும்.

4. 02.11.2020 ம் தேதி பிரதிவாதிகளுக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 8 ஆகும். மேற்படி அறிவிப்பினை பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாததால் திரும்ப வந்த அஞ்சல் உறைகளை (2 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 9 ஆகும். 15.12.2020 ம் தேதி தாவா சொத்துக்களுக்கு இணையவழியில் பெறப்பட்ட வழிகாட்டி மதிப்பின் நகலினை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ 10 ஆகும்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.09.22 19:05:02 +0530